சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–29.05.2020

<u>சாதாரணக் கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் வைகாசி மாதம் 16–ஆம் நாள் ( மே திங்கள் 29–ஆம் நாள்:– 29.05.2020) வெள்ளிக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான மூன்றடுக்கு முககவசம் மற்றும் Non Contact Infrared Thermometer Device வாங்கும் பணிக்கு **14.05.2020**ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. JOJNFOCOM-Madurai
   1. Non Contract Infrared Thermometer Device 1 No- **6500/–**
      GST 18% - 1170/-
      **Total - 7670/–**
   2. 3 Layer Mask1 No - **14.00/–**
      GST 5% - 0.70/-
      **Total - 14.70/–**
2. Thiraviyam Infotech - Madurai
   1. Non Contract Infrared Thermometer Device 1 No- **7000/–**
      GST 18% - 1260/-
      **Total - 8260/–**
   2. 3 Layer Mask1 No - **16.00/–**
      GST 5% - 0.80/-
      **Total - 16.80/–**

**அலுவலகக் குறிப்பு:–**
1. **குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **மேற்கண்ட பணிக்கு முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **25, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.2**

கொரோனா நோய் தொற்று காரணமாக **144** தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், அம்மா உணவகத்தில் பொது மக்களுக்கு தேவையான உணவு சமைத்து வழங்க தேவையான சில சமையல் பாத்திரங்கள் வாங்கியமைக்கு தொகை ரூ.**13800/–**ஐ விலைப்புள்ளிதாரர் திரு.கா.வனராஜ், சின்னமனூர் என்பவருக்கு பொது நிதியின் கீழ் வழங்கவும், **1920–**ஆம் வருடத்தின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு **15–**இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** பதிவு செய்யலாம். (ந.க.எண்.1313/2020/இ1)

**தீர்மான எண், நாள்** **26, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் கொரோனா தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தேனி அவர்களின் உத்திரவினன்டி பொது மக்களுக்கு தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஆட்டோ மூலம் ஒலி பெருக்கி (மைச்செட்) விளம்பரம் மேற்கொண்ட வகையில் ஆன செலவினம் ரூ.4750/—ஐ சுகாதார ஆய்வாளர் திரு.M.P.செந்தில்ராம்குமார் தான் செய்ததாகும். எனவே செலவினத் தொகையினை எனக்கு வழங்க கேட்டுக் கொண்டதை தொடர்ந்து மேற்கண்ட செலவினத் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** **27, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சியில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை குறித்து மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் 26.04.2020—ஆம் தேதியன்று ஆய்வு மேற்கொண்ட போது சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த புகைப்படங்களை வழங்க அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்படி புகைப்படங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களுக்கும் 2 பிரதிகள் எடுத்து கொடுத்த வகையில் ஆன செலவினம் ரு.2940/— மற்றும் 4900/— ஆக மொத்தம் ரூ.7840/—ஐ சுகாதார ஆய்வாளர் திரு.M.B.செந்தில்ராம்குமார் செலவு மேற்கொண்டுள்ளதாகவும் மேற்கண்ட செலவினத்தை வழங்க கோரியதை தொடர்ந்து செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** **28, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சொத்துக்கள் மற்றும் காலியிடங்கள் கிரையம், இனாம் செட்டில்மெண்ட், தான செட்டில்மெண்ட் மற்றும் பாகப்பிரிவினை உயில் சாசனம் ஆகியவை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் நகராட்சில் சொத்துவரி மற்றும் காலியிட வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சொத்துவரி மற்றும் காலியிட வரி பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பங்களுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| ஆவண மதிப்பு | நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூ. |
|---|---|
| **கிரையப் பத்திர மதிப்பு 1.00 இலட்சம் வரை** | **ரூ.200/–** |
| **கிரையப் பத்திர மதிப்பு 1.00 இலட்சத்திற்கு மேல்** | **ஒவ்வொரு லட்சத்திற்கும் கூடுதலாக ரூ.25/–** |
| **தான செட்டில்மெண்ட், உயில் வம்சா வழி மற்றும் இதர வகை அனைத்து பத்திரப் பதிவுகள்** | **ரூ.250/–** |

**அலுவலகக் குறிப்பு:–** நகராட்சி வருவாய் ஈட்டும் பொருட்டு மேற்படி கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1436/2020/அஇ1)

**தீர்மான எண், நாள்** **29, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி மற்றும் கணினி தொடர்பான உபகரணங்கள் பராமரிப்பு பணி (2020–2021–ஆம் ஆண்டிற்கு) UPS மற்றும் பிரிண்டர்கள் பராமரிப்புப் பணி மற்றும் பிரிண்டர்க்கு தேவையான புதிய டோனார்கள் வாங்கும் பணி, மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.300000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1456/2020/இ2)

**தீர்மான எண், நாள்** **30, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2, பொன்னகர் பகுதியில் (கவிதா மெஸ் அருகில்) கேட் வால்விலிருந்து புதிய மெயின் குழாய் பதிப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.340000/– (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1531/2020/இ2)

**தீர்மான எண், நாள்** **31, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சயின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் (குடிநீர் லாரி) வாகன எண்.TN603761)க்கு புதிய மின் கலப் பெட்டி (எக்ஸ்சைடு எக்ஸ்பிரஸ் பேட்டரி) வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.19000/—க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0324/2014/இ2)

**தீர்மான எண், நாள்** **32, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஜெட்ராடிங், மார்ஷல் மற்றும் குடிநீர் லாரி ஆகிய வாகனத்திற்கு 2020—2021—ஆம் ஆண்டிற்கான சாலைவரி (Road Tax) செலுத்த உத்தேச மதிப்பீடு தொகை ரூ.21684/—க்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.19, நாள்.29.04.2020— இன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் 15.05.2020ம் அன்று உத்தமபாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மேற்படி வாகனங்களுக்கு சாலை வரி தொகை ரூ.23034/—யை செலுத்த தெரிவித்துள்ளனர்.

மேற்படி வாகனங்களுக்கு ஏற்கனவே மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.21684/—யை விட கூடுதலாக ரூ.1350/— செலுத்த வேண்டியுள்ளது. எனவே மேற்படி வாகனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையை கூடுதல் தொகையையும் சேர்த்து மொத்தம் ரூ.23034/—யை உத்தமபாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த அனுமதித்தும், மேற்படி தொகையை உத்தமபாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில செலுத்திய வகையில் திரு.எம்.சந்தனமகாராஜன் ஒட்டுநருக்கு தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2996/2001/இ2)

**தீர்மான எண், நாள்** **33, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.10**

இந்நகராாடசியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN60S6634க்கு புதிய மின் கலப்பெட்டி (Battery) வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.7000/—க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.7057/2014/இ2)

**தீர்மான எண், நாள்** **34, நாள்.29.05.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோக பணிக்கு பயன்படுத்தப்படும் திரவ வாயு குளோரின் சிலிண்டர்கள் (ஒரு வருடத்திற்கு) வாங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.280000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2381/2011/இ2)

**தீர்மான எண், நாள்** **35, நாள்.29.05.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணமான கையுறை (Gloves)– 40 எண்ணம் வாங்கிய வகையில் ஆன செலவினம் ரூ.3200/– கார்த்திக் ராஜா, ஏஜென்சீஸ், சின்னமனூர் என்ற நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்கண்ட செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.
(ந.க.எண்.0454/2020/எச்1)

**தீர்மான எண், நாள்** **36, நாள்.29.05.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சியின் பரப்பளவு 25.95 சதுர கிலோ மீட்டராகும். நகராட்சியின் 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 42305 ஆகும். மொத்தம் 27 வார்டுகளில் குடியிருப்புகள் 12511 உள்ளது. மேற்படி குடியிருப்புகளில் டெங்கு தடுப்பு பணியினை மேற்கொள்ள 37 DBC பணியாளர்கள் 6 குழுக்களாக பிரிக்கப்பட்டு குழு ஒன்றிற்கு 6 நபர்கள் வீதம் ஒவ்வொரு நபரும் நாள் ஒன்றிற்கு 50 வீடுகளில் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளையும், மேல்நிலை தொட்டி, தரைதள தொட்டி மற்றும் தண்ணீர் தேங்கும் இடங்களை பார்வையிட்டு கொசு புழு உற்பத்திக்கு ஏதுவாக திறந்து இருக்கும் தொட்டிகளில் உள்ள கொசு புழுக்களை அழிக்கும் பணி மேற்படி பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.2571/2017/ஜே1, நாள்.23.04.2018–இல் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் டெங்கு தடுப்பு பணியை DBC பணியாளர்கள் மூலம் செய்ய அறிவுரை வழங்கியுள்ளார்.

எனவே மேற்கண்ட DBC பணியாளர்கள் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் மேற்கொண்டு வரும் பணியின் ஒப்பந்த காலம் 16.07.2020 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. தற்போது தென்மேற்கு பருவமழை ஆரம்ப ஆக உள்ள நிலையில் நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது. எனவே டெங்கு தடுப்பும் பணிகளை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள 2020–2021–ஆம் ஆண்டைய தரவிலைப் பட்டியலின்படி 31.03.2021–ஆம் தேதி முடிய உள்ள காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 37 DBC பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.37,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** **37, நாள்.29.05.2020**

**தீர்மானம்**

*******